Registered as a Newspaper

சுவைமிக்க உஸ்வத்தை கண்டோஸ் தயாரிப்பு களுக்கு விஜயம்செய்யுங்கள்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளேயர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

சிறு கைத்தொழில்களுக்கு ஏற்ற மூலப்பொருள்களை மலிவாகப் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் முதன்மை வகிக்கும் ஸ்தாபனம்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளேயர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 10 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 29 (26 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 206

ஜனாதிபதி சொல்கிறார்:- புதனன்று கைச்சாத்து; ராஜீவ் வருவது உறுதி

# எவ்வளவுதான் கடும் எதிர்ப்பு வந்தாலும் ஒப்பந்தத்தை அமுல் நடத்தியே தீருவேன்

## இனியும் உயிர்களைத் தியாகம் செய்ய முடியாது

### இஸ்ரவேலிய நலன் பிரிவுக்கு மூடுவிழா; பாகிஸ்தானிய பயிற்சிக்கு முற்றுப்புள்ளி

யாழ்ப்பாணம் ஜூலை 26

எவ்வளவு தான் எதிர்ப்பு, நாலா பக்கங்களில் இருந்து வரினும்கூட, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய யோசனைகளை நான் கைவிடப்போவதில்லை. புதிய யோசனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் நான் உறுதியாக நிற்பேன்

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன நேற்று நடைபெற்ற ஆளுங்கட்சியின் (ஐ. தே க. வின்) நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் முழங்கினார்.

இனியும் உயிர்களைத் தியாகம் செய்ய நான் தயாரில்லை.

புதிய யோசனைகள் அடங்கிய ஒப்பந்தம் எதிர்வரும் புதன்கிழமை கைச்சாத்திடப்படும் என்றும்.

அதில் ஒப்பம் இடுவதற்காக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொழும்பு வருவார் என்றும் ஜனாதிபதி அறிவித்தார்.

ஒப்பந்தப பிரகாரம் கொழும்பில் இயங்கும் இஸ்ரவேலிய நலன்பிரிவு மூடப்பட்டு, இஸ்ரவேலிய ஆலோசகர்கள் வெளியேற்றப்படுவர்.

ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் இனி பாகிஸ்தானுக்குப் பயிற்சிக்கு அனுப்பப்படமாட்டார்கள்– என்றும் அவர் மேலும் தகவல் தெரிவித்தார்.

ஸ்ரீகோதாவில் நடந்த ஐ. தே. க நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

புதிய ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதில் நான் உறுதியாக நிற்பேன்.

இனியும் உயிர்களை தியாகம் செய்ய நான் தயாராக இல்லை.

யுத்தத்தைத் தொடருவதன் மூலம் முழுநாட்டையும், வருங்கால சந்ததியையும் இனியும் பணயம் வைக்க நான் தயார் இல்லை.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் எதிர் வரும் புதன்கிழமை கொழும்பில் கைச்சாத்திடப்படும்.

இந்தியாவின் சார்பில் பிரதமர் ராஜீவ் காந்தி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார்.

அதற்கு முன்னர் தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும்.

**சிங்கக்கொடி**

இலங்கையின் தற்போதைய தேசியகீதம், சிங்கக் கொடி ஆகியன அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

அடுத்த ஆண்டு முடிவுக்குள் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

வடக்குடன், கிழக்கு இணைவதை விரும்பாதவர்கள் அப்போது எதிர்த்து வாக்களிக்க வாய்ப்புக் கிடைக்கும்.

ஒப்பந்தத்தில் இந்தியப் பிரதமர் கைச்சாத்திடுவதால், அதனை மீறி நடப்பதற்கு வாய்ப்பு இல்லை.

அதன் பின்னர் ஏற்படும் பயங்கரவாதத்தை அடக்க இந்தியா உத

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஒப்பந்தத்திலுள்ள முக்கிய அம்சங்கள் என்ன?

கொழும்பு, ஜூலை 26

★ தனி தேசிய இனமாக தமிழர் அங்கீகரிக்கப்படுவர்.

★ தமிழ், ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

★ சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் தமிழரின் பாரம்பரிய வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரே தமிழ் ஆட்சி மாநிலமாக அங்கீகரிக்கப்படும்.

இவையே இலங்கைத் தமிழர் பிரச்சினைத் தீர்வு காணும் ஒப்பந்தத்தில் காணப்படும்.

முக்கிய அம்சங்கள் ஆகும் என்று வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

(இ–எ)

### 5ஆவது கப்பல் நேற்று புறப்பட்டது

சென்னை, ஜூலை 26

இந்தியாவின் ஐந்தாவது உணவுக் கப்பல் காங்கேசன்துறைக்கு நேற்று சென்னையில் இருந்து புறப்பட்டது.

ஆயிரம் தொன் உணவுப் பொருள்கள் இக் கப்பலில் அனுப்பப்பட்டுள்ளன.

இதனையும் சேர்த்து இந்தியா இதுவரை 4 ஆயிரம் தொன் உணவுப் பொருள்களை யாழ்குடாத் தமிழருக்கு அனுப்பி வைத்துள்ளது

(இ–எ)



ஜே. ஆர்.



ராஜீவ்

### கோட்டை வேட்டு: இருவர் பலி!

யாழ் கோட்டையில் இருந்து சிப்பாய்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு நேற்றும் இருவர் பலியாகினர்.

கொட்டடி முஸ்லிம் பகுதியைச் சேர்ந்த முகம்மது மிஸ்கின் (வயது 60) என்னும் எட்டுப் பிள்ளைகளின் தந்தையும் யோகநாதன் (மதி) என்பவர் படுகாயமடைந்து யாழ் அரசினர் வைத்திய சாலையிலும் மரணமாகினர்.

(இ–160)

### வெங்கட்ராமன் ஜனாதிபதியாக நேற்று நண்பகல் பதவி ஏற்பு

இந்தியாவின் எட்டாவது ஜனாதிபதியாக திரு. இ. வெங்கட்ராமன் நேற்றுப் பகல் பதவியேற்றார்.

நாடாளுமன்ற மண்டபத்தில் பதவி ஏற்பு வைபவம் கோலாகலமாக நடத்தப்பட்டது.

புதுடில்லி உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் திரு. பகத், புதிய ஜனாதிபதிக்கு விசுவாசப் பிரமாணம் செய்து வைத்தார்.

பின்னர் பதவி விலகும் ஜனாதிபதி ஷெயில்சிங்குடன் திரு. வெங்கட்ராமன் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றார்.

இனக் கலவரங்களைத் தூண்ட மதம், மொழி ஆகியவற்றை பாவிக்க மக்கள் அனுமதிக்கப் படக்கூடாது என்று புதிய ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

(இ–எ)

### வெளியுறவு அமைச்சர் பதவி ராஜீவிடம்

### திவாரி நிதி அமைச்சர்

புதுடில்லி, ஜூலை 26

வெளியுறவு அமைச்சர் பதவியை பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று ஏற்றுக் கொண்டார்.

இது வரை காலமும் வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்த நாராயண் தத் திவாரி, நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

திரு. வி. பி. சிங்குக்குப் பிறகு நிதி அமைச்சர் பதவியை திரு. ராஜீவ் காந்தி வைத்துக் கொண்டார்.

வர்த்தக அமைச்சர் திரு. பி. சிவ்சங்கர் சட்ட திட்ட அமைச்சராகவும் பணிபுரிவார்.

இணை அமைச்சராக இருந்த திரு. ராஜேஸ்வர் ரைட்லர் சுற்றுலாத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

புதிய அமைச்சர்கள் புதிய ஜனாதிபதி வெங்கட்ராமன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

**உள் நோக்கம் என்ன?**

இலங்கை இனப் பிரச்சினை விவகாரங்களில் நேரடியாகக் கலந்து கொள்வதற்காகவே பிரதமர் காந்தி வெளியுறவு அமைச்சர் பதவியை நேற்று ஏற்றுக்கொண்டார்.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ–எ)

**சுபநேரம்**

26–07–1987

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:-
9. 02 முதல் 10.32 வரை

ராகுகாலம்:-
04.32 முதல் 6.02வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# ராஜீவ்–பிரபா தனி ஒப்பந்தம்

கொழும்பு, ஜூலை 26

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய யோசனைகள் அடங்கிய ஒப்பந்தத்துடன் மேலும் இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்.

ஒன்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போல இலங்கை—இந்திய ஒப்பந்தம்.

அடுத்தது ராஜீவ் — பிரபா ஒப்பந்தம் ஆகும். பிரதமர் ராஜீவ் காந்தியுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வார்என்று புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

இலங்கை அரசுடன் தமிழர் செய்துகொள்ளும்ஒப்பந்தத்தை அமுல் செய்யும் உத்தரவாதத்தை இந்தியா வழங்குவதாக இந்த ஒப்பந்தம் அமையும்.

**பிரபா நன்றி**

இதே வேளை இலங்கைத் தமிழரின் பேராளராக இந்திய அரசு தன்னை அங்கீகரித்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் இந்தியச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

(6–ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சில் பங்குபற்ற ஈரோஸ் சங்கரும் டில்லி பயணமாகிறார்

சென்னை, ஜூலை 26

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் கலந்து கொள்ள புதுடில்லிக்கு ஈரோஸ் இயக்கமும் அழைக்கப்பட்டு உள்ளது.

திரு. வி. சங்கர் ஈரோஸின் சார்பில் பேச்சுக்களில் கலந்து கொள்வார்.

இப்படி சென்னையில் நேற்று ஈரோஸ் இயக்கம் அறிவித்தது.

(இ–எ)

## நாம் அளித்த வாக்குறுதி நிறைவேறும் காலம் வந்துவிட்டது

### இந்தியப் பிரதிநிதி மகிழ்ச்சி

— அலுவலகச் செய்தியாளர்கள்:- சண்.ஜோண்சன், எம். பேரின்பநாயகம் —

யாழ்ப்பாணம், ஜூலை 26

நாங்கள் யாழ்ப்பாணம் வந்தவுடன் யாழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேறும் காலம் நெருங்கி விட்டது.

இவ்வாறு நேற்றுக் காலை இந்தியாவிலிருந்து யாழ் திரும்பிய இந்தியச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. வேணுகோபால் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த ஜூன மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த திரு. வேணுகோபால், இம்மாதம 9 ஆம் திகதி இந்தியா பயணமாகி இருந்தார்.

நேற்று நான் சென்னையில் போராளிகளின் முக்கிய பிரமுகர் ஒருவரைச் சந்தித்து உரையாடினேன்.

அவர் என்னிடம், "தமிழருக்குச் சாதகமான ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது" என்று மிகவும் சந்தோஷத்துடன் கூறினார்.

நாங்கள் ஏற்கனவே யாழ் வந்தவுடன் கதறியழுது முறையிட்ட மக்

(6–ஆம் பக்கம் பார்க்க)

**முச்சந்தி முரளி**




அரசியல் என்பது உது தான். ஒரு கிழமை என்ன, நாள் என்ன, ஒரு நிமிஷத்திலேயும் தலைகீழாக மாறி, நிலைமை வேறுபடும்......பாத்தியளே......!

### திடீர் திருப்பம் ஏற்பட்ட காரணம் என்னவோ?

**அனுரா பண்டாரநாயக்கா ஆச்சரியம்**

கொழும்பு, ஜூலை 26

யுத்தத்தில் வெல்லும் வரை தீர்வுஇல்லை என்று கூறிவந்த அரசு ஏன் இத் திடீர் திருப்பத்தை எடுத்தது? வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலத்தை தமிழருக்குக் கொடுக்கும்படி இந்திய அரசு பயமுறுத்தியதன் பலனே இத் திடீர்த் திருப்பம்? ...

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கேட்டார்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 18ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் படவேண்டும் என்ற அரசுப் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில்திரு. அனுரா பண்டாரநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்

(6–ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

**வகுப்புகள்**

G.C.E. (O/L)இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியெய்தாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், 18 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் குறைந்த காலத்தில் விஷேட சித்திக்கு வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (1360)

**வாடகைக்கு**

நல்லூர் சுற்றுடலில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதிக்கு அண்மையில், பாதுகாப்பான இடத்தில் யாழ் நகர பஸ் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குள் மின்சாரம், நல்ல தண்ணீர், வசதிகளுடன் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. டிஸ்பென்சரி, ரியூட்டரி, தொழிலகங்களாகவும் கந்தோராகவும் பாவிப்பதற்கு ஏற்ற இடம். விபரங்களுக்கு: 53/6, அன்னசத்திரலேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (1353)

**விற்பனைக்கு**

சகலவிதமான பிறந்த தின, திருமண மற்றும் வைபவங்களுக்குமான வாழ்த்து மடல்கள் புதிதாக வந்து உள்ளன. வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளும் வியாபாரிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை 15/2 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3224)

**ரேனியோ**

பாதுகாப்பான சூழ்நிலையில் சகலவிதமான அச்சுவேலைகளையும் சிறந்தமுறையில் செய்து கொள்ளவும் – ரேனியோ பிரதிகள் நவீன முறையில் செய்துகொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகராச் சந்திக்கு அருகாமை) (3214)


# தச்சன்குளம் இராணுவ தலைமையகம் விஸ்தரிக்கப்படும்

கொழும்பு, ஜூலை 26

வவுனியா தச்சன்குளத்தில் உள்ள வன்னி ஆயுதப் படையினரின் தலைமை அலுவலகம், இராணுவத்தினரின் பயிற்சி நிலையத்தையும் கொண்டதாக விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இம்முகாமிலிருந்து சுமார் 3 மைல் தூரத்தில் கண்டி வீதியில் அமைந்துள்ள ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமையும் இங்கு இடம் மாற்றுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன என்று கூறப்படுகின்றது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஆங்கிலேயரால் இராணுவ முகாமாகவும், விமான இறங்கு தளமாகவும் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்டது தச்சன்குளம் பகுதி.

ஆரம்பத்தில் விமானப் படையினர் மட்டுமே சிறிய அளவில் இங்கு முகாமிட்டிருந்தனர்.

மூன்று வருடங்களின் முன்பு வன்னிப்பகுதியின் கூட்டுப் படையினரின் தலைமை அலுவலகமாக இது மாற்றப்பட்டது.

இதற்காக விமான ஓடுபாதையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் குடியிருந்த பொதுமக்கள் எல்லோரையும் வெளியேற்றி, 500 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது.

அவசரகால விதிகளின் கீழ் படையினரின் தற்காலிகத் தேவைக்காக இது சுவீகரிக்கப்படுவதாக அப்போது கூறப்பட்டது. நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய நும் இப்பகுதி மீண்டும் சிவில் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது; அவ்வாறே கருதப்பட்டது.

ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகள் பல முனைகளிலும் துரிதமடைந்திருக்கும் இந்த வேளையில், முன்னர் தற்காலிகமாக சுவீகரிக்கப்பட்ட 500 ஏக்கர் பிரதேசத்தையும் சட்டரீதியாக இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் வகையில் உறுதிமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-164)

## 18 நாட்களின் பின்பு விடுதலை

வடமராட்சி ஜூலை 26

நெல்லியடி இராணுவ முகாம் தகர்ப்பின்போது காணமற்போன வேலுப்பிள்ளை ஜெயதேவன் என்னும் வாலிபர் 18 நாட்களின் பின் வயாவிளான் முகாமில் இருந்து விடுதலையானார். (இ-160)

## துறைமுகத்துக்குள் நுழைய கப்பல் ஏஜென்சிக்குத் தடை

யாழ்ப்பாணம் ஜூலை26

இந்திய கப்பல்களின் நலன்களை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்ட சப்பல் ஏஜென்சி நிறுவனத்தை காங்கேசன் துறைமுகத்துக்குள் நுழையவிடாமல்இராணுவம் தடை விதித்துள்ளது.

இந்திய உணவுப் பொருள்களை காங்கேசன் துறைமுகத்துக்கு ஏற்றிவரும் கப்பல்களின் நலன்களைக் கவனிப்பதற்கு இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் ஜெயபாலசிங்கம் கப்பல் ஏஜன்சி நியமிக்கப்பட்டிருந்தது.

இந்திய ஸ்தானிகராலய உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் பார்வையிட்ட இடங்கள் பற்றியும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புப் பற்றியும், மேற்படி நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் பத்திரிகையாளர்களுக்கு தகவல் தெரிவித்ததுக்காகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. (இ-7)

## இலங்கை அரசின் போக்கில் அமிர் சந்தேகம்

சென்னை, ஜூலை 26

இலங்கை அரசு தனது புதிய நிலைப்பாட்டில் உறுதியாக நிற்குமா என்பது சந்தேகமாக இருக்கின்றது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்

புதிய யோசனை பற்றி கருத்து வெளியிடுகையில் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் சொன்னதாவது;

எம்மைச் சந்தித்த இந்திய அதிகாரிகள் புதிய யோசனைகளில் உள்ள முன்னேற்றம் பற்றி எம்மிடம் தெரிவித்தனர்.

வடக்கு – கிழக்கு தனி மாநிலமாக அமைக்கப்படும் என்றும் தமிழ், ஆங்கிலம் உத்தியோக மொழிகளாக்கப்படும். என்றும் இந்திய அதிகாரிகள் எம்மிடம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தன திரு. டிக்ஸிற் மூலம் பிரதமர் காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் உள்ள விஷயங்கள் பற்றியும் தெரிவிக்கப்பட்டது.

சமாதானத்துக்கான அறிகுறி தென்படுகிறது.

ஆனால் இலங்கை அரசு எந்த அளவில் தமது தீர்மானத்தில் உறுதியாக நிற்கின்றதுஎன்பதுதான் சந்தேகமாக உள்ளது.

இச்சந்தேகம் நியாயமானது என்பது கடந்த கால வரலாறு சுட்டிக்காட்டும்.

தமிழருக்கு நீதி வழங்க முன் வருவதும் பின்னர் கைவிடுவதும் ஆட்சியில் உள்ளோர் கடைப்பிடித்து வந்த கொள்கை ஆகும்.

இலங்கை அரசின் உறுதி நிலையை தளரவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது இந்தியாவின் பொறுப்பு.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (இ-எ)


**மேசன் வேலை பயிற்சி**

இளைஞர்களை தகைமையும் திறமையும் உள்ள மேசன் தொழிலாளராக புதிய கட்டிட நிர்மாண முறைகளில் நேரடிப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பெறும் தகுதியில் பயிற்சி நெறிகள் அமைந்துள்ளன.

22 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும் / உடன் வரவும்.

பயிற்சி ஆரம்பம் - 29 - 07 - 1987

பயிலுனருக்கு ரூபா 10- - 30/- வரை நாளாந்தப்படி வழங்கப்படும்

பணிப்பாளர்:
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை.

**Diploma in Nursing**
தாதிப் பயிற்சி நெறியில்
**டிப்புளோமா**
7ஆம் பகுதிக்கான விரிவுரைகள்
ஆரம்பம்:- 1st August 1987
North Ceylon
Technical Institute
14, St. Peters Lane,
Jaffna.


## இந்திய நிவாரணத்துக்கான உத்தரவுப் பத்திரம் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வயாவிளான், பலாலி தெற்கு பகுதியினருக்கான இந்திய நிவாரணத்துக்கான உத்தரவுப் பத்திரம் இன்றும் நாளையும் விநியோகிக்கப்படும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை வயாவிளான் முதலாம் வட்டாரம் பலாலி தெற்கு 11 ஆம் வட்டாரம், 13 ஆம் வட்டாரம் ஆகியவற்றில் வசிப்போருக்கும்—

நாளை திங்கட்கிழமை வயாவிளான் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வட்டாரங்களில் வசிப்போருக்கும் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இதைப் பெறவருவோர், குடும்பத் தலைவரின் அடையாளக் கார்ட்டை அல்லது உணவு முத்திரையைக் கொண்டு வரும்படி கிராம சேவையாளர் செ. உலகநாதன் கேட்டுள்ளார். (இ-7)

## கறுப்பு ஜூலை தினம்

யாழ்ப்பாணம், ஜூலை26

பயங்கரவாதிகள் என நாமம் சூட்டப்பட்டு அரசின் கண்காணிப்பில் இருந்த 52 போராளிகளையும் கொடூரக்கொலை செய்த அந்த கறுப்பு ஜூலையை நினைவு கூருவோம்.

1983 ஜூலை மாதம் சிறையில் நடைபெற்ற படுகொலைகளை நினைவு கூருமுகமாக மாணவ இளைஞர் பொது மன்றத்தினால் (கைஸ்) வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள சோவனிச அடக்கு முறைக்கு உட்பட்ட ஓர் இனம் தனது வாழ்க்கையின் உத்தரவாதத்திற்காக, சுதந்திரத்திற்காக நடத்தும் போராட்டம் ஈழப் போராட்டம் ஆகும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 7)

## மருத்துவபீட மாணவர் நடத்திய ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை26

யாழ் பல்கலைக்கழகத்துடன் வட இலங்கை தனியார் மருத்துவ கல்லூரியை இணைக்கக் கோரும் தீர்மானத்தை எதிர்த்து நூற்றுக்கணக்கான யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஊர்வலத்தின் இறுதியில் மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் மு. மதியழகன் பல்கலைக்கழக பதிவாளரூடாக துணைவேந்தரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

மேற்படி தீர்மானத்தை எதிர்த்து மருத்துவபீட மாணவர்கள் வகுப்புக்களைத் தொடர்ந்து பகிஷ்கரித்து வருகின்றனர். (இ-7)

## நல்லூரில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூலை 26

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் பட்டப் பகலில் கொள்ளையிடப்பட்டது.

வியாழக்கிழமை இச் சம்பவம் நடந்தது.

ஆயுதபாணியாக வந்த இனந்தெரியாத இருவர் வீட்டில் இருந்த குடும்பப் பெண் ஒருவரைப் பயமுறுத்திக் கட்டி வைத்த பின்னரே கொள்ளையை நடத்தினர்.

கொள்ளையர்கள் பணம், தாலிக்கொடி, நகைகள் மற்றும் பொருள்களை எடுத்துச் சென்றனர். (இ-10)

## அகதிகளுக்கு முட்டை!

கொடிகாமம், ஜூலை 26

வரணிப் பகுதியில் தஞ்சம் அடைந்துள்ள சுமார் 50ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தலா மூன்று முட்டைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மிருசுவில் பங்குத் தந்தை அருள்திரு அமிர்தகுமார் அடிகளும் மற்றும் சிலரும் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருந்தவர் (இ-75)

## முஸ்லிம் இளைஞர் திருமலையில்கைது!

திருகோணமலை, ஜூலை26

திருகோணமலையில் முஸ்லிம் இளைஞரான முகம்மது ஹஸன் என்பவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்

இவர் திருகோணமலை சிவன் கோவிலடியைச் சேர்ந்தவர் தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்தவர்.

தனது வர்த்தக நிலையத்தில் இருந்த சமயமே இவர் கைது செய்யப்பட்டார். (உ-எ-150)

## அகதிகளுக்கு சர்வோதயம் உதவி

கொக்குவில், ஜூலை 26

வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் தங்கியிருக்கும் 114 குடும்பங்களைச் சேர்ந்த 497 பேருக்கு சர்வோதயம் யாழ் கிளையினர் சீனி, பால்மா, தேங்காய் போன்ற உணவுப் பொருள்களை வழங்கினர்.

இடம் பெயர்ந்த 6 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்காக சிறுவர் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவும் சர்வோதயம் தீர்மானித்துள்ளது. (இ-69)

## காயமுற்ற தாதியின் சாட்சியம் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ் ஆஸ்பத்திரியில் 19ஆம் வார்ட்டில் கடமையில் இருக்கும்போது ஷெல் தாக்குதலுக்குள்ளான தாதியான திருமதி அடைக்கலத்தின் சாட்சியத்தை ஆணையாளர் அலஸ் வெள்ளியன்று பதிவு செய்தார்.

திருமதி அடைக்கலம் இப்போது உடல் இயங்க முடியாத நிலையிலேயே இருக்கிறார்.

கச்சேரியின் கீழ் மாடியில் உள்ள ஒரு மூடிய அறையில் அவரது சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

திருமதி அடைக்கலத்திற்காகவே இந்த விசேஷ ஏற்பாடு.

ஏற்கனவே நடைபெற்ற விசாரணைகள் கச்சேரியின் மேல்மாடியிலேயேநடைபெற்றன. (உ-10)

## கிளிநொச்சியில் பரவிவரும் காய்ச்சல்

### இனம் காண முடியாது மக்கள் பீதி

கிளிநொச்சி, ஜூலை26

கிளிநொச்சி மாவட்டத்தில் மிக வேகமாகப் பரவிவரும் ஒருவகைக் காய்ச்சலினால்மக்கள் பீதி அடைந்து வருகின்றனர்.

இது மலேரியாவா அல்லது மூளைக்காய்ச்சலா என்று அறிந்துகொள்ள முடியாதநிலை இருந்து வருகிறது.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பலர் கிளிநொச்சி, அக்கராயன், தர்மபுரம், பூநகரி போன்ற இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலர் அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கும் வந்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சியில் நுளம்பின் தாக்கமும் அதிகரித்து வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கெனக் கொண்டு வரப்பட்ட மலத்தீன் பைக்கெட்டுகள் வவுனியாவிலிருந்து உடன் தருவிக்கப்படவேண்டுமென கிளிநொச்சிப் பிரஜைகள்குழு கேட்டுள்ளது. (இ-79)

## சுட்டிபுரம் கோயில் வசந்தமண்டபம் திருத்தப்பட்டுப் பூசை நடைபெறுகிறது

கொடிகாமம், ஜூலை 26

இராணுவத் தாக்குதலால் சேதமடைந்த சுட்டிபுரம் அம்மன் கோவில் கட்டடங்களில் வசந்தமண்டபம்உடனடியாக திருத்தம் செய்யப்பட்டு வேயப்பட்டுள்ளது

இக்கோவில் மூலஸ்தானமும் விக்கிரகமும் அம்மன் திருவருளால் காப்பாற்றப்பட்டு [illegible] மூலஸ்தானத்தை அடுத்து உள்ள மூன்று மண்டபங்களில் சுவர்கள் மட்டும் காணப்படுகின்றன.

இப்போது இங்கு பத்து அல்லது பன்னிரண்டு அகதிகள் மட்டும்காணப்படுகின்றனர். ஏனையோர் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

அகதிகள் தங்குவதும் தேவையற்ற சனக் கூட்டம் கூடுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது என்று [illegible] அறிவித்திருக்கின்றனர். (இ-75)

## இணைப்பு அதிகாரி சந்தித்தார்

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சியில் நடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிளிநொச்சி பிரசைகள் குழுவின் புதிய அங்கத்தவர்கள் அண்மையும் கிளிநொச்சி இராணுவ இணைப்பதிகாரி சேனக் குலதுங்கா அண்மையில் சந்தித்து கலந்துரையாடினர். (இ-76)

## பொதுக் கூட்டம்

மண்டைதீவு, ஜூலை 26

மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை 27ஆம் திகதி திரு. க. குலசிங்கநாதன் தலைமையில் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ-88)


**கேள்வி அறிவித்தல்**

**பாலருக்கும், மாணவர்களுக்குமான உருக்குக் கதிரைகள், மேசைகள் வழங்கல்**

பாலருக்கும், மாணவர்களுக்குமான கீழே குறிப்பிட்டிருக்கும் உருக்குக் கதிரைகள், மேசைகள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏதாவது அரசாங்கத் திணைக்களங்களில் உருக்குத் தளபாடங்கள் வழங்குநராகப் பதிவு செய்தவர்களிடமிருந்து யாழ்ப்பாணம் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 10 00 மணி வரை கூறுவிலைகளை (இணைப்படிவங்களில்) ஏற்றுக் கொள்ளுவார்.

1. பாலருக்கான உருக்குக் கதிரைகள், மேசைகள், மாணவருக்கான உருக்குக் கதிரைகள், மேசைகள் வழங்கல். (சணியப்பட்டியல், விபரக் கூற்றுக்கள், நிபந்தனை என்பவற்றை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களக் கணக்காளரிடம் பார்வையிடலாம்.)
2. திட்டவட்டமான கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு (1) மாத காலத்துக்குள் விபரக்கூற்று பிரகாரமான வழங்கல் முடிக்கப் பெறுதல் வேண்டும்.
3. மேல் விபரங்களை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களக் கணக்காளரிடம் இருந்து 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14 ஆம் திகதி உட்பட அத் திகதிவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
4. கூறுவிலைகளைத் திறத்தல்.

கூறுவிலைகளைத் திறக்கும்போது கேள்வியாளர்கள் சமுகமாக இருக்கலாம். சமுகமளித்திருக்கும் கேள்வியாளர்களுக்குக் கூறு விலைகள் வாசித்துக் காட்டப்படும். சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளின் பிரதிகளை ஆராய்ந்தறிய அவர்கள் அனுமதிக்கப்படுவர். 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கூறு விலைகள் திறக்கப்படும்.

எம். எம். மன்சூர்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1987 ஆடி 22

**ரோட்டறிக் கழகம்**
**கிளிநொச்சி - பரந்தன்.**
**இலவச கற்றுக் கண்ணாடி வழங்கல்**

மேற்படி திட்டத்திற்கமைய கற்றுக் சத்திரசிகிச்சை செய்து மூக்குக் கண்ணாடி பாவிக்க டாக்டர் அனுமதித்தால் அவர்கள் வசதியின்மை காரணமாக அக் கண்ணாடியை பெற்றுக்கொள்ள முடியாவிட்டால், அவர்களுக்கு ரோட்டறிக் கழகம் மூக்குக் கண்ணாடி வழங்குகிறது.

தேவைப்படுபவர்கள் டாக்டரின் குறிப்புடன் செயலாளர், ரோட்டறிக் கழகம், கிளிநொச்சி – பரந்தனுக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (2327)


**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



R.R. பூபாலசிங்கம் J.P.
திதி: 26-7-87

ஏழ்மையிலும் – நேர்மை
கோபத்திலும் - பொறுமை
தோல்வியிலும் – விடாமுயற்சி
தரித்திரத்திலும் – பரோபகாரம்
துன்பத்திலும் – தைரியம்
செல்வத்திலும் – எளிமை
பதவியிலும் – பணிவு
நல்லதையே நினை– நல்லதையே செய்.

— பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரயாண ஒழுங்குகள்

# HORIZON ENTERPRISES

★ குவைத் ● மாலைதீவு ★ பாஹ்ரெயின் ● சவூதி அரேபியா

முதலான மத்திய கிழக்கு நாடுகளுக்கான அனைத்து வேலைவாய்ப்புகளுக்கும் பிரயாணம் செய்ய விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

ஏற்சனவே எம்மிடம் பாஸ்போட் தந்தவர்களின் பிரயாணத்திற்கான அனைத்து ஒழுங்குகளும் தயார் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் பெயர், விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. 1ஆம் திகதி சனிக்கிழமை பிரயாணம் அதற்கு முன்னர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பெயர் குறிப்பிடப்படாதவர்களும் உடன் எம்மைக் காரியாலயத்தில் சந்திக்கவும்.

விலாசம்:

R. குணரத்தினராசா
கண்டி வீதி, கொடிகாமம்,
(கொடிகாமம் புகையிரதநிலையம் முன்பாக)

இலியாஸ் ஏபிரகாம் A. P.
இரண்டாம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

★ A. பத்மதாஸ் ★

97/1 பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

1987 தைமாதம் முதல் சென்றமாதக் கடைசி வரையில் எம்மால் பிரயாணம் மேற்கொண்டோர் பெயர் விவரங்கள்-:

| | | | |
|---|---|---|---|
| 1. | முருகுப்பிள்ளை லெட்சுமணன், | — | கலைநகர், சித்தன்கேணி. |
| 2. | சின்னையா பொன்ராசா, | — | சங்கானை கிழக்கு, காபன்டை கட்டுவல் வீதி, சங்கானை. |
| 3. | செல்லத்துரை சிவரத்தினராசா, | — | குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு. |
| 4. | மாணிக்கம் கிருஷ்ணன், | — | உரும்பிராய் கிழக்கு, யோகபுரம். |
| 5. | செல்லப்பா சுதாகரன், | — | சமாதி கோவிலடி, குப்பிளான், ஏழாலை. |
| 6. | துரைராசா சக்திதாசன், | — | அரசடி ஒழுங்கை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. |
| 7. | வேலுப்பிள்ளை அமரசிங்கம், | — | சண்டிலிப்பாய் சந்தி, சண்டிலிப்பாய். |
| 8. | நடராசா இராமச்சந்திரன், | — | ஆவரங்கால், புத்தூர். |
| 9. | செல்லப்பா சுப்பையா கணேசநாதன், | — | நாவற்குழி, கைதடி. |
| 10. | தருமராசா ஸ்ரீஸ்கந்தராசா, | — | 723, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். |
| 11. | முருகேசு சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன், | — | B.H. Lane, இருபாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| 12. | தம்பிராசா செல்வச்சந்திரன், | — | பாரதி லேன், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம், |
| 13. | ஆழ்வாப்பிள்ளை பரமநாதன், | — | பார்வதி பவனம், அல்வாய் தெற்கு, அல்வாய். |
| 14. | ஜேம்ஸ் ஜெயசீலன் ரஞ்சன் சவரிமுத்து, | — | |
| 15. | கந்தசாமி மதனகோபாலன், | — | டச்ரோட், வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை. |
| 16. | சோமசுந்தரசர்மா ரவிச்சந்திரன். | — | சித்திவிநாயகர் கோவிலடி, அரியாலை. |
| 17. | சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை ரெூபேட் எட்மன்ட், | — | தவசிகுளம், மிருசுவில். |
| 18. | சுப்பிரமணியம் ஞானகணேசு, | — | வேம்படி ரோட், உடுத்துறை, தாளையடி. |
| 19. | வரப்பிரகாசம் செல்வராசா, | — | கூழாவடி, செட்டிதோட்டம், 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. |
| 20. | சிவக்கொழுந்து பரமேஸ்வரன், | — | |
| 21. | கிருஷ்ணபிள்ளை ரவீந்திரன், | — | கவுந்தில், கரவெட்டிகிழக்கு, கரவெட்டி. |
| 22. | செல்வராசா ஜெயசீலன், | — | மணல் குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 23. | தியாகராசா சண்முகநாதன், | — | கல்வயல் வடக்கு, சாவகச்சேரி. |
| 24. | சூசைப்பிள்ளை ஜோசெப் ஜேசுதாசன், | — | லோட்டஸ் ரோட், சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு. |
| 25. | கதிரவேலு ஸ்ரீதரன், | — | |
| 26. | செபமாலை டேவிட், | — | 4 ஆவது மைல், ஆனைக்கோட்டை. |
| 27. | முகமட் சாகுல் அமீர், | — | |
| 28. | பொன்னையா குணரட்ணம், | — | |
| 29. | சின்னத்துரை புண்ணியமூர்த்தி, | — | இல. 35, 5ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை. |
| 30. | மயில்வாகனம் ஜெயகாந்தன், | — | |
| 31. | நாகலிங்கம் ஜெயானந்தராசா, | — | 24, கோவில் வீதி, சிக்னல் போஸ்ட், சுண்டிக்குளி. |
| 32. | சுப்பிரமணியம் இராசையா இராசரட்ணம், | — | C/o. N. இராசலிங்கம், ஏழாலை மத்தி, ஏழாலை. |
| 33. | அந்தோனிப்பிள்ளை கொட்வின் விமலதாஸ், | — | |
| 34. | மாரிமுத்து நாகேஸ்வரன், | — | வேலணை கிழக்கு, வேலணை. |
| 35. | பொன்னையா புண்ணியமூர்த்தி, | — | நீர்வேலி வடக்கு, நீர்வேலி, |
| 36. | சவரிராஜப்பு சரண்சிலஸ், | — | கிழக்குத்தெரு, ஊர்காவற்றுறை. |
| 37. | F. டொமினிக் ஜீவநாதன், | — | மேலயப்புலம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி. |
| 38. | அலோசியஸ் எட்வேட் இன்பராஜா, | — | |
| 39. | முருகுப்பிள்ளை ஜெகன்மோகன், | — | கலைநகர், சித்தன்கேணி. |
| 40. | S. பற்றிக் ஜெயராஜா, | — | கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. |
| 41. | கைலாசபிள்ளை லாலாகரன், | — | |
| 42. | சடையர் வேலாயுதபிள்ளை, | — | வரணி, இயற்றாலை. |
| 43. | ஆழ்வார் கந்தசாமி, | — | வரணி, இயற்றாலை. |
| 44 | வேலன் தங்கராசா, | — | வரணி, இயற்றாலை. |
| 45. | பிலிப் ஜேசுதாசன், | — | பலாலிச்சந்தி, வயாவிளான். |
| 46. | பஸ்ரியன் மலகியல் வின்சன் ரக்கி, | — | இல 11 St. செபஸ்ரியன் ரோட், குருநகர், யாழ்ப்பாணம். |
| 47. | இராசையா தேவராசா, | — | புதுமடம், உடுவில் தெற்கு, மானிப்பாய். |
| 48. | சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை பூபாலசிங்கம், | — | பலாலி ரோட், 1/20 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 49. | காசிப்பிள்ளை அமிர்தலிங்கம், | — | கச்சாய் தெற்கு, கொடிகாமம். |
| 50. | செல்லத்துரை தெட்சணாமூர்த்தி ஜெயகுணநாதன், | — | அராலி கிழக்கு, அராலி. |
| 51. | அந்தோனி பிரான்ஸிஸ் ஹென்றி, | — | மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய். |
| 52. | கதிரன் மணியம் கேதீஸ்வரநாதன், | — | கல்லுடை, புத்தூர் கிழக்கு, புத்தூர். |
| 53. | கந்தையா செல்லத்துரை ஜனதாசன், | — | கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். |
| 54. | கணபதி தம்பிராசா மகாலிங்கம், | — | ஐயனார் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| 55. | கதிரவேலு சிங்கராசா, | — | சரவணை கிழக்கு, வேலணை. |
| 56. | வேலப்பொடி தம்பிராசா குலபதி, | — | கோணப்புலம், மல்லாகம், யாழ்ப்பாணம். |
| 57. | இராசு இராசநாயகம், | — | புதுமடம் உடுவில் தெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம். |
| 58. | வீரசிங்கம் நவரட்ணம் கணேசபதி, | — | மானிப்பாய் ரோட், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். |
| 59. | முத்தன் அரியராசா, | — | உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். |
| 60. | கந்தையா ஐயாக்குட்டி கிருபாகரன், | — | இணுவில் தெற்கு, இணுவில். |
| 61. | சண்முகநாதன் மனோரஞ்சன், | — | பாடசாலை ஒழுங்கை, தாவடி, கொக்குவில். |
| 62. | கதிர்காமு விக்னேஸ்வரன், | — | புதிய பூமி, இடைக்காடு, அச்சுவேலி. |
| 63. | செல்லத்தம்பி இராசையா பரமேஸ்வரன், | — | நந்தாவில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில். |
| 64. | வீரசுத்தி சுப்பையா பத்மநாதன், | — | குப்பிளான், ஏழாலை. |
| 65 | முத்தன் அரியராசு, | — | உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். |
| 66. | சுப்பையா சுந்தரலிங்கம், | — | சரசாலை வடக்கு, சாவகச்சேரி. |
| 67. | சண்முகசம்பு ரவீந்திரராசா, | — | செட்டியார் மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. |
| 68. | ஐயாத்துரை லிங்கேஸ்வரன், | — | சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை விவகாரம் இராமாயணமாகத் தொடர்கிறது

## 'நியூஸ்வீக்' சொல்கிறது

சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை மன்னன் இராவணன், இந்திய இளவரசன் இராமனின் மனைவி சீதையைக் கடத்திக் கொண்டு வந்தான்.

தனது அழகிய மனைவியைக் கண்டுபிடிக்க இராமன் கடல், தரை, ஆகாய மார்க்கமாக தேடுதல் நடத்தினன்.

இராமனின் படைகள் தென் இந்தியாவுக்கு வந்தன. துருப்புக்கள் சில படகுகள் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டன.

இரண்டு நாடுகளையும் பிரிக்கும் 22 மைல் நீள கடற் பகுதிக்குப்பாலம் அமைக்கப்பட்டது.

அனுமான் கடவுள் ஆகாயமார்க்கமாகவும் துருப்புக்களைக் கொண்டு வந்து இறக்கினன். கசப்பான யுத்தம் நடந்தது. இராவணன் கொல்லப்பட்டான். இலங்கை கைப்பற்றப்பட்டது. இராமனும் சீதையும் மீண்டும் இணைந்தனர்.

இது உண்மையிலேயே நடந்தது கடத்தலா? யுத்தமா? இராவணன், இராமன், சீதை உண்மையில் இருந்தார்களா?

இது பற்றி கவலைப் படத் தேவையில்லை.

பழங்கதைகள் என்றும் நிரூபிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் கலாசார மனோபாவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆகவேதான் நவீன சரித்திரத்திலும் பார்க்க, புராணக்கதைகள் தற்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நடந்து கொண்டு இருக்கும் சஞ்சலமான நிலைக்கு மூல காரணமாக விவரிக்கப் படலாம்.

இருநாடுகளும் தங்கள் பரஸ்பர தேசிய உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாத நிலைக்கு அப் புராணக்கதைகள் தான் காரணமாக அமைந்து உள்ளன.

### கண்ணீர்த்துளிப் பிரதேசம்

புராணக் கதைகளுக்குக் கொடுக்கும் விளக்கம், கொடுப்பவரைப் பொறுத்து உள்ளது.

இராவணன் இலங்கையில் புகழுக்குரியவனாக வணங்கப்படுகின்றான்; இந்தியாவிலோ துன்மார்க்கத்தின் சின்னமாகக் கருதப்படுகின்றான்.

இராமனின் வெற்றிகள் இராமாயணமாகியது. இந்துக்களின் ஆதிக்கம் கொண்ட இராமரின் நாடு இந்தியா இலங்கையை விளையாட்டு இடமாகவே என்றும் கருதி வந்துள்ளது.

புராணங்களிலும் உறுதிப்படுத்தப்பட்ட அரசியல் சரித்திரத்திலும் 'அளவு' கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

இந்தியா பெரிய நாடு. இலங்கையோ 'கண்ணீர்த்துளி' அளவான பிரதேசம்.

இப்பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்க நிலையை வெட்ட வெளிச்சமாக்கியது இராமாயணமே.

ஒரு கட்டத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் பெரும்பகுதி, இந்திய தமிழ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது.

சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை, இந்தியாவின் செல்வாக்குக்குள் மறைமுகமாகக் கட்டுப்பட்டது.

இலங்கைத் தலைவர்களும் அடிக்கடி விரும்பாமலே 'அரசியல் யாத்திரைகளை' புதுடில்லி நோக்கி நடத்தி வந்தனர்.

பழங்காலப் புராணக் கதைகள் நவீன கால அரசியலிலும் எதிரொலிக்கின்றன.

தென் ஆசியாவில் பெயர்கள், முகங்கள் விஷயங்கள் பல்லாயிரம் ஆண்டுகளின் பின்னர் மாறி இருக்கின்றன; ஆனல் புராணக்கதைகளின் மூலாதார நோக்கங்கள் அப்படியேதான் உள்ளன.

இந்தியாவின் முதன்மை ஸ்தானத்தை ஏற்க இலங்கை மறுப்பதே அந்த மூலகாரணம்.

பெரும்பாலான இந்தியர்கள், ஜனாதிபதி ஜெயவர்த்தனவை இராவணனின் மறு உருவாகவே காணுகின்றனர்.

பத்து ஆண்டுகளுக்கு முன் பதவிக்கு வந்த ஜெயவர்த்தன இந்தியாவுக்கு 'அரசியல் வழிபாடு' செய்யச் செல்வதை நிறுத்தினர்.

அவரின் மேற்குச் சித்தாந்தம் இந்தியத் தலைவர்களின் இடதுசாரிப் போக்குக்கு பதிலாக அமைந்தது.

அவரின் சொந்தப் பெருமை மிக்க தேசியவாதம், இலங்கை எவ்வளவு சிறிய நாடாக இருந்தாலும் பெரிய இந்தியாவுக்கு எதிராகத் தனது பிராந்தியத் தனித்துவத்தை நிலைநாட்டும் என்று சொல்ல வைத்தது.

> உலகங்கள் மோதும் போது - இத்தலைப்பில் பிரபல பத்திரிகையாளர் திரு. பிரானே குப்தே எழுதிய கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகின்றது.
>
> அமெரிக்க சஞ்சிகை 'நியூஸ்வீக்'கின் ஜுலை 15 இதழில் இது பிரசுரமாகியது.
>
> திரு. குப்தே, உலக சனத்தொகை பற்றியும் இந்தியா பற்றியும் பல புத்தகங்களை எழுதியிருக்கின்றார்.
>
> சரித்திரம் மட்டுமல்ல, புராணம்தான் இலங்கை - இந்தியாவுக்கு இடையேயான அமைதியின்மையை விவரிக்க இயலும் என்று இக்கண்ணோட்டத்தில் திரு. குப்தே கூறுகின்றார்.

ஜெயவர்த்தனவினல் 'பசு' என்று வர்ணிக்கப்பட்ட இந்திராகாந்திக்கு இது எரிச்சலூட்டியது; மகனை ராஜீவ் காந்திக்கும் கோபத்தை ஏற்படுத்தியது.

அயல் நாடுகளின் ஒருமைப்பாட்டை மதிப்பதாகவும் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு அமைதித் தீர்வையே விரும்புவதாக இந்தியா கூறி வந்தாலும் சமமானவர்கள் மத்தியில் தனக்கு முதலிடம் கிடைக்க வேண்டும் என்பதில் புதுடில்லி கவனமாக இருந்து வருகின்றது.

### இனப்பிரச்சினை

ஆகவே இராமாயணம் தொடர்கின்றது. இங்கு கடத்தல் நடைபெற ஒன்றும் இல்லை.

80 வயதான பக்தி நிறைந்த, ஆடம்பரமான பௌத்தரான ஜெயவர்த்தன இராவண வேடத்துக்குத் தகுதி படைத்தவர் அல்லர்.

உள்ளூர் இனப்பிரச்சினை சிங்கள - தமிழ் இனங்களுக்கு இடையே முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் ஒன்று.

குரோதம், வன்செயல் எவ்வளவு அதிகரித்து வந்தாலும் பிராந்திய ரீதியிலான சரித்திரம், சந்தேகம் ஆகியன இரு தரப்பு அம்சமாகக் காணப்படுதல் வேண்டும்.

தமிழருக்கு ஒரு நாடு, ஏனையோருக்கு இன்னென்று என்று அனுமதிக்கப்போவது இல்லை என்பதில் ஜெயவர்த்தன திடமாக இருக்கின்றார்.

தற்போது இருக்கும் அரசமைப்பு இயந்திரத்தினுள் அரசியல் இணக்கம் காணவும் அவர் தயாராக இருக்கின்றார்.

ஆனல் அவரின் நிலை, இராணுவத்தின் அத்துமீறல் நடவடிக்கைகளினல் பலவீனப்பட்டுள்ளது.

அவரது சிங்களக் கூட்டாளிகளின் கடுமையான போக்கு, தமிழ்ப் பிரிவினைவாதிகள் விட்டுக் கொடுக்காத்தன்மை ஆகியன ஏனைய காரணங்களாகும்.

அண்மையில் எல்லாம் இறுதியாக உச்சத்துக்கு வந்தன. அனுமான் மீண்டும் தோன்றவில்லைத்தான்.

ஆகவே இராமனின் வழித்தோன்றல்கள் பெறுமதியான மாற்று வழிவகைகளைக் கடைப்பிடித்தனர்.

படகுகளில் யாழ் நோக்கி மனிதநேய உதவிகள் அனுப்பப்பட்டன. இலங்கை மறுத்தது. படகுகள் அணி திரும்பியது. அவை சோவியத் தயாரிப்பான அன்டொனெவ் போக்குவரத்து விமானங்களாக பிரெஞ்சுத் தயாரிப்பான மிராஜ் விமானங்கள் ஆக மீண்டும் இலங்கை சென்றன.

புராணக் கதைகளின் சரித்திரம் மீண்டும் அரங்கேறுகிறதா என்றவாறு பாரம்பரியவாதிகளும் நவீன காலவாதிகளும் இச்சுவாரஸ்ய சம்பவத்தை நோக்கினர்.

அயல்நாட்டின் விவகாரத்தில் நேரடியாகத் தலையிடும் உரிமை தனக்கு இருக்கின்றது என்பதை இந்தியா இதன்மூலம் எடுத்துக் காட்டியது.

இலங்கை அரசைப் பொறுத்தளவில் புவியியல் அரசியல் பற்றி மீண்டும் கசப்பான முறையில் படிக்க வேண்டி ஏற்பட்டது. இது தவிர்க்க முடியாத ஒன்று.

பண்டைக்காலம் போன்று, ஆட்சி பற்றிய தர்மநெறி இரண்டு நாடுகளின் விவகாரங்களில் ப்ரதான அம்சமாக மீண்டும் இடம் பெற்றுள்ளது. இதை நீண்ட காலத்துக்கு முன்னர் இராமபிரான் விளங்கிக் கொண்டார்; இராவணனல் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ✶

தமிழில்: எஸ். ஜி.


✶ ஓர் அரிய பெரிய சந்தர்ப்பம் ✶

மீண்டும் வழமைபோல் வெளிநாடு செல்ல முடியும்

✶ ஜேர்மனி
✶ பிரான்ஸ்
✶ பெல்ஜியம்
✶ நோர்வே
✶ கனடா

AUCTIONERS & BROKERS

உடனடியாக தாமதமின்றித் தொடர்பு கொள்க.
ஏனைய வசதிகளும், ஒழுங்குகளும் செய்யப்படும்.

எங்கள் ஏனைய சேவைகள்:-

✶ எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
✶ துரிதமான பாஸ்போட், விசா, பொன்ட் ஒழுங்குகள்
✶ Confirmation, Re-confirmation and Cancellation
✶ இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

MACK COMMUNIC TIONS & TRAVELS,
இல: 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
TELE: 24791, 24836


## நல்லூர்க் கந்தன் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜுலை 26

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

காலை 10 மணிக்குக் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகும் இந்த மகோற்சவத்தின் விசேஷ தினங்கள் வருமாறு:—

ஆகஸ்ட் 9 ஆம் திகதி மாலை 5 மணிக்கு மஞ்சத் திருவிழா. 16 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கார்த்திகைத் திருவிழா. 19 ஆம் திகதி காலை 7 மணிக்கு சந்தானகோபாலர் உற்சவம். அதே தினம் மாலை 5மணிக்கு கைலாச வாகனம்.

20 ஆம் திகதி காலை 7 மணிக்கு சஜவல்லி மஹாவல்லி உற்சவம். அதே தினம் மாலை 5 மணிக்கு வேல்விமானம்.

21 ஆம் திகதி காலை 7 மணிக்கு தெண்டாயுதபாணி உற்சவம். 22 ஆம் திகதி மாலை 5 மணிக்கு சப்பறத்திருவிழா.

23 ஆம் திகதி ஞாயிறு காலை 7 மணிக்கு ரதோற்சவம். 24ஆம் திகதி காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம்.

25 ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழா. 26 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறும் ஸ்ரீவைரவமூர்த்தி உற்சவத்துடன் மகோற்சவம் நிறைவு பெறும். (இ-7)

## சமய சந்நிதிகளில்

### நயினையில் ஆடிப்பூர விழா

யாழ்ப்பாணம் ஜுலை26

நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் இலட்சார்ச்சனை ஆடிப்பூரத்திருவிழா கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்து 28ம்திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் பகல் விசேஷ அபிஷேகம், ஸ்ரீசக்கர யந்திர பூசை, இலட்சார்ச்சனை ஆகியனவும் மாலை ஸ்ரீ சக்கர யந்திர பூசையும் இலட்சார்ச்சனையும் இடம் பெறும்.

10ஆம் நாள் (29.7.87) புதன்கிழமை பூர நட்சத்திரத்தன்று காலை அம்பாளுக்கு நவோத்தர சகஸ்ர (1008 சங்குகள்) சங்காபிஷேகம்; பூர கர்மா (ருதுசாந்தி)இலட்சார்ச்சனைப் பூர்த்தி, தீபாராதனை ஆகியனவும் அம்பாள் வீதி உலா வரும் அலங்காரக்காட்சியும் அதனைத்தொடர்ந்து ஆலய கல்யாண மண்டபத்தில் அடியார்களுக்கு மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம் பெறும்.

### பொற்பதி வீதி புனித சின்னப்பர் ஆலயத்தில்

யாழ்பபாணம், ஜுலை26

கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள புனித சின்னப்பர் ஆலய திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இன்றைய தினம் காலை 7.30 மணிக்கு திருப்பலியும் அதனைத்தொடர்ந்து திருச் சொரூப பவனியும் இடம் பெறும். (இ - 7)

### சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தானத்தில்

சாவகச்சேரி, ஜுலை 26

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இம் மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை ஆடிப்பூர விழா சிறப்பு நிகழ்ச்சிகளுடன் நடைபெற இருக்கிறது:

காலை அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகம். பிற்பகல் அருளுரைகள், வசந்தமண்டப விசேஷபூசை, பஞ்சமுக அர்ச்சனை, 108 தீப பூசை ஆகியவை நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-31)


இலவசம்! விளம்பரம் ஒன்று இலவசம்!!

துரிதமாக விற்க! வாங்க! மாற்றீடு செய்ய!

இந்த அரிய சந்தர்ப்பம் சில நாட்களுக்கே! ஒரு செலவில் இரு விளம்பரங்கள்!!

கல்வி, பிறந்தநாள் வாழ்த்துக்கள், விற்பனை, தேவை, மணப்பந்தல், காணி விற்பனை, வேலைவாய்ப்பு இவைகளில் எவையாயினும் புதன், ஞாயிறு உதயன்/சஞ்சீவி ''சின்னஞ்சிறு விளம்பர''ப் பகுதியில் விளம்பரப்படுத்துவதன்மூலம் அதிக பயனடையுங்கள்.

★ நீங்கள் செய்யவேண்டியது இதுவே:

1. உங்கள் விளம்பரத்தை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சலுகைக் கட்டணக் கூப்பனில் எழுதுங்கள்,
2. சொற்களைக் கணக்கிட்டுச் செலவைக் கணியுங்கள்.
3. பூர்த்திசெய்த விண்ணப்பத்தையும் பணத்தையும், விளம்பரப் பகுதி: நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சமர்ப்பியுங்கள்.

★ இந்தக் கூப்பனில் பதியப்பட்டு பணம் செலுத்தப்பட்ட ஒவ்வொரு விளம்பரமும் இலவசமாக மீள்பிரசுரிக்கப்படும். இச்சலுகை 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும்.

எமது விளம்பரக் கட்டணம்:

| | |
|---|---|
| முதல் 20 சொற்கள் | ரூபா 15-00 |
| மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் (ஆகக் கூடிய சொற்கள் 35) | 50 சதம் |

★ ''மேற்பார்த்து'' குறிப்புடைய விளம்பரங்களுக்கு விளம்பர முழுக் கட்டணத்துடன் ரூபா 10-00 மேலதிகமாக அறவிடப்படும். விளம்பரதாரர்கள் நேரடியாக காரியாலயத்துக்கு வந்து கடிதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சின்னஞ்சிறு விளம்பரம் உதயன் / சஞ்சீவி
சலுகைக் கட்டணக் கூப்பன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பிரசுரிக்க வேண்டிய திகதி:-..............................
பகுதி:- ..............................
இலவசமாக மறுபிரசுரம் செய்ய விரும்பும் திகதி:- ..............................
பெயர் ;- ..............................
விலாசம்;-..............................
..............................
சொற்கள்:..............................செலவுத் தொகை: ..............
திகதி,-....................
..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தினமும் இரண்டு மணி நேரம் மௌனமாக இரு. சாப்பிடும் பொழுது மௌனத்தைக் கடைப்பிடியுங்கள். உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது.

—சுவாமி சிவானந்தர்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
26.07.1987 த.பெ.இல: - 23

# அதித அவசரம் வேண்டாம்

இலங்கையில் தமிழர் பிரச்சினை முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட 'வரலாறு' உடையது. அதற்கான தீர்வு இன்னும் மூன்று நாட்களில் கிடைத்து விடப்போவதாக அறிவித்தல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கேற்ற விதத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கமும், மத்தியஸ்தரான இந்திய அரசாங்கமும் துரித கெதியில் செயலாற்றி வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அந்த அறிவித்தல்களைச் சரியாக்குவது போல விமானங்கள் கொழும்புக்கும், டில்லிக்கும் யாழ்ப்பாணத்திற்கும், சென்னைக்கும் என மாறி மாறிப் பறக்கின்றன.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வை எவ்வளவு விரைவில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு விரைவில் கொண்டுவர வேண்டும் என்ற மன உறுதியுடன் இந்தியா செயற்படுவதைக் காணமுடிகிறது.

இந்தியாவின் துரித செயற்பாட்டில் ஒன்றாக, யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை விசேஷ விமானம் அனுப்பி இந்தியப் பிரதமர் டில்லிக்கு அழைத்திருந்தார். அது தமிழரின் உரிமைப் போராட்ட வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையாகும். தமிழரின் உரிமைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரித்ததற்கு ஒப்பாகும்.

எனினும் திரு. பிரபாகரனும் அவரது சகாக்களும் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னரே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட அம்சங்களில் அனேகமானவை வெளியாகிவிட்டன.

சர்வதேச செய்தி ஏஜன்சிகளும், பி. பி. ஸி. போன்ற வானொலிச் சேவைகளும் ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை பணிந்து பிடித்து வெளியிட்டுவிட்டன.

தீர்வுக்கான புதிய யோசனை ஸ்ரீலங்கா அரசாங்கத்தினுடையது. எனினும் இந்தியாவின் கருத்துக்களும் அதில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். உத்தேச ஒப்பந்தத்தின் அம்சங்கள் அதனையே பிரதிபலிக்கின்றன.

வடக்கு — கிழக்கு இணைந்த மாநிலம் என்றால் 'அலர்ஜி' அடைந்து வந்த ஸ்ரீலங்கா ஜனாதிபதி, எந்தக் கஷ்டம் வந்தாலும் கைச்சாத்திட உள்ள ஒப்பந்தத்தை அமுலாக்கியே தீருவேன் என்று அறிவித்துவிட்டார். அது அவரது தலையெழுத்து.

வடக்கு—கிழக்கு இணைப்பை மட்டுமன்றி, தமிழர்களின் நியாயபூர்வ உரிமைகள் எதுவுமே வழங்கப்படக்கூடாது என்ற வினையைத் தென்னிலங்கையில் விதைத்தவர் அவரே, விதைத்தவினையை அறுக்கவேண்டிய நியதியை அவரிடமே ஆண்டவனாகக் கொடுத்திருக்கிறார்!

பின்னுக்கு இழுக்கும் பிரேமதாஸவையும், அழுது வடியும் அத்துலத் முதலியையும் தாஜா செய்வதும், மகாசங்கம் மற்றும் தென் இலங்கைத் தீவிரவாதிகளை, சிங்களப் பேரினவாதிகளை அடக்கி வைப்பதும் அவரது பொறுப்பு. வயதான காலத்தில் தமக்கு முட்டுக்கட்டை போட வருவோரை தமது 40 வருட காலச் சாணக்கியத்தால் அவர் சமாளித்துக் கொள்வாரோ என்பதும் அவரைப் பொறுத்ததே!

ஆனால் தமிழர் தரப்பில் புதிய யோசனை அல்லது தீர்வு ஒப்பந்தம் எப்படி நோக்கப்படுகிறது என்பதே முக்கியம். வடக்கு-கிழக்கு இணைப்பு என்று சொல்லப்படுகிறது. சுயாட்சி என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் மாகாண சுயாட்சியா, மாநில சுயாட்சியா, வழங்கப்படும் அதிகாரங்கள் எந்தளவுக்கு சுயாட்சித் தன்மை உடையவை என்ற விவரங்கள் முற்றாக வெளியிடப்படவில்லை.

அதாவது, தமிழர்களைப் பொறுத்த மட்டில் பிள்ளையைக் காணாமலே— தெரியாமலே— பெயர் வைப்பது போன்ற முயற்சியாக உத்தேச ஒப்பந்தம் உள்ளது.

எனவே பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதில் அதித அவசரம் விரும்பத்தக்கதல்ல. எதனையும் தீர ஆராய்ந்து முடிவெடுக்கத் தமிழர் தரப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

தமிழர்களுக்கு ஒவ்வாத தீர்வு எதையும் திணிக்கும் முயற்சியில் இந்தியா இறங்கக்கூடாது. இது விடயத்தில் தமிழர் தரப்பில் மட்டுமன்றி இந்தியத் தரப்பிலும் மதியூகமான ராஜதந்திரம் கையாளப்பட வேண்டும். 'இத்தனைக்கும் பின்னர் இதுதானோ மருந்து?' என்று தமிழ் மக்கள் வினா எழுப்ப இடம் வைக்கக் கூடாது.

## அத்தாட்சிப் பத்திரம் வேண்டும்

வடமராட்சி வாசிகள் என்பதை நிரூபிக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தின் அத்தாட்சிப் பத்திரத்தை வைத்துள்ள வடமராட்சி மக்களே வடமராட்சிப் பகுதியில் இலவச பஸ் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

இப்படி வடமராட்சி இராணுவ அமைப்பு நிபந்தனை ஒன்றை விதித்திருக்கின்றது.

வடமராட்சிப் பகுதியில் குறிப்பிட்ட காலம் வரை இலவச பஸ் பயண வசதியை அப்பகுதி மக்களுக்கு வழங்குவதாக பாதுகாப்பு வட்டாரம் ஏற்கனவே அறிவித்துள்ளது தெரிந்ததே.

(இ - எ - 160)

# திருமலையில் இருந்து சுதுமலைவரை!

## இனப்பிரச்சினைபற்றி ஒரு கண்ணோட்டம்

இதுவல்லவோ திருப்பம், இதுவல்லவோ வேகம்—

நம்ப முடியவில்லையே! இப்படி மூக்கில் விரலை வைத்து அதிசயப்படும் அளவுக்குக் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

எண்பத்தொரு வயதுத் தலைவரின் தலைமையிலான அரசுக்கு என்ன நடந்து விட்டது?

எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, அரசுக் கட்சியின் ஆதரவாளர்களே இப்படிக் கேள்வி எழுப்பிக் குழம்பிப் போயுள்ளனர்.

—வடக்கு - கிழக்கு இணைப்பா? அது 1931 இலேயே டொனமூர் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

—தனிநாட்டுக்கோரிக்கையா? அது 1920 இல் கருவாகி, உருவாகி வந்த ஒன்று.

இப்படித் தமிழர் போராட்டத்துக்கு சரித்திரச் சான்றுகளைக் கூறி திகைக்க வைத்து விட்டார் தர்மிஷ்டர்.

56 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணைப்பு யோசனை இன்று தர்மிஷ்டரால்

**உள்ளும் புறமும்**

மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அதனை அடிப்படையாக வைத்து உடன்பாடு கண்டவர், அமரர் பண்டாரநாயக்கா.

1926 இலேயே சமஷ்டி ஆட்சியை ஆதரித்த பண்டாவின் பெயரைத் தப்பித் தவறியும் வாயில் வராதபடி இன்றும் எச்சரிக்கையாக தர்மிஷ்டர் பார்த்து வருகின்றார்.

இக்கட்டத்தில் தமிழர் உரிமைப் போராட்டத்தின் சில முக்கிய நிகழ்வுகளை மீண்டும் நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும் அல்லவா!

### திருமலை யாத்திரை

தனிச் சிங்களச்சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக் கட்சி சாத்வீக உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தது

காலிமுகக் கடற்கரைச் சத்தியாக்கிரகத்தின் பின்னர் திருமலை யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நாலு திக்குகளில் இருந்தும் தமிழர், முஸ்லிம்கள் பாதயாத்திரையாக வந்து திருகோணமலையில் கூடினர்.

அப்போது ஆட்சியில் இருந்தது பண்டாவின் கட்சி.

இறுதி நாள் பேரணி.

பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பாதுகாப்புக்குக் குதிரை இராணுவ கவசவாகனங்கள், பீரங்கி வண்டிகள் கொழும்பில் இருந்து திருகோணமலை வந்தன.

அவை பேரணியின் முன்னும் பின்னும் நடுவிலேயும் வர மக்கள் தமிழுரிமைக் கோஷங்களை எழுப்பி வந்தனர்.

முன்னே தந்தை செல்வா. சுதந்திர உணர்ச்சிப் பாடல்களைப் பாடிக்கொண்டு தொண்டர்கள் அணிவகுப்பு.

ஒரு பாடல்:

''இனி வேண்டும் சமஷ்டி ஆட்சி''—

தனிநாடு அன்று கோரப்படவில்லை.

திருமலை முற்றவெளியில் திரண்டிருந்த லட்சக்கணக்கான தமிழர்கள் மத்தியிலே அரசுக்கு 'சமஷ்டி ஆட்சி அமைப்பை'க் கொண்டுவரக் காலக்கெடு விதிக்கும் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது

காலக்கெடு நெருங்க பிரதமர் பண்டா, தந்தை செல்வாவை அழைத்துப் பேசினார்.

அனுரா சிறு குழந்தை, அம்மா, அப்போது இல்லாள்.

'கிரிபத்துடன்' உருவானது பண்டா - செல்வா உடன்பாடு.

இணைப்புக்கு வழிவகுக்கக்கூடியதாக அது இருந்தது.

### கண்டி யாத்திரை

பண்டா — செல்வா உடன்பாடு தமிழருக்கு வடக்கு - கிழக்கில் தனி இராஜ்ஜியம் ஒன்றை வழங்கி விடும்— இப்படி கூறி அன்றைய தர்மிஷ்டர் கண்டி பாத யாத்திரை தொடங்கியதும் பின்னர் குழப்பப்பட்டதும் தெரிந்ததே.

ஆனால் பிரதமர் பண்டாவின் அலரிமாளிகை முன்னால் மகாசங்கத்தைக் கொண்டு சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

இறுதியில் அந்த உடன்பாட்டை பண்டா கிழித்தெறிந்தார்.

### இனக்கலவரங்கள்

அதன் பின்னர் 1958 இல் ஆரம்பித்த இனக்கலவரங்கள் இன்றுவரை நீடிக்கின்றன.

1977வரை சிங்களவர், தமிழரைத் தாக்கிக் கொன்று வந்தனர்.

1977 இன் பின்னர் இனக்கலவரம், அரசுப் படைகள் நடத்தும் 'இனக்கொலை' யாக மாறிவிட்டது.

1983 ஜூலைக் கலவரம் அவற்றின் உச்சக்கட்டம். அதைத் தொடர்ந்து இன்று வரை தமிழர் தினமும் கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

### தமிழீழம்

வட்டுக்கோட்டையிலே தமிழீழம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

நிறைவேற்றியவர்கள் இடைவழியிலே தொய்ந்து விட்டார்கள்.

பாராளுமன்றத்தைவிட்டே நின்றுவிட்டார்கள்.

தமிழ் இளைஞர்கள் அதனை ஆயுதப்போராட்டத்தால் முன்னெடுத்துச் செல்லத் தொடங்கினர்.

அதனால் வீறுகொண்டு எழுந்தது தமிழர் உரிமைப் போராட்டம்.

அப் போராட்டத்தின் உச்சக்கட்டம், இந்திய விமானப்படையின் ஹெலிக்கொப்டர் மூலம் போராட்ட மண்ணில் இருந்து போராட்டத் தளபதி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு பிரபாகரனை கடந்த வெள்ளியன்று இந்திய அரசு அழைத்துச் சென்றது.

அப்பெருமையைப் பெற்ற இடம் சுதுமலை.

### பேச்சுக்கள்

1983 இல் அன்னை இந்திரா மத்தியஸ்தம் செய்ய முன் வந்தார். பேச்சுக்கள் தொடங்கின. இணைப்பு-சி வந்தது. அதிலே 'மாகாண சபைகள் திட்டம்—பேச்சின் மூலம் இணைப்பு'— என்ற ரீதியில் யோசனைகள் இருந்தன.

தர்மிஷ்டர் கூட்டமோ அதை 'இணைப்பு - சி' ஆகக்கருதாமல் (Annex-ure Ceylon) 'இணைப்பு-சி(லோன்)' ஆகக் கருதி விட்டது பலன்: அனுதை அந்தஸ்து அதற்குக் கிடைத்தது.

பின்னர் சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் சர்வ முட்டாள்களாக அனைவரையும் கருதிச் செயல்பட்டது தர்மிஷ்டர் அரசு.

பின்னர் திம்பு போய் வீம்பு பேசியது கொழும்பு அரசு. பண்டாரி அணுகுமுறையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது.

தமிழீழக் கோரிக்கைக்குச் சரியான மாற்றுத் தீர்வு ஒன்றைக்கொண்டு வந்தால் ஏற்பது பற்றி சிந்திப்போம்—

இப்படித்தான் தமிழர் விடுதலை அமைப்புக்கள்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## உடன்பாடு தயார்!

### உடன்பாட்டை ஏறுபவர் யார்?

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இரண்டு உடன்பாடுகளாம்.

ஒன்று இரண்டு நாடுகளுக்கு இடையே.

மற்றது தமிழர் அமைப்புக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே.

உடன்பாடு வருவது சாத்தியமாம். உடன்கட்டை ஏறுபவர்கள் யார் என்பது தெரியவில்லை.

நாளை திங்கள் நடைபெற உள்ள அவசர அமைச்சர்கள் கூட்டத்தில்தான் தெரியும்!

இதனிடையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி 'சமாதானம் கதவைத் தட்டுகின்றது'- என்று சொல்லி இருக்கின்றார்.

அத்துலத் முதலியைப் பற்றி இந்த இடத்தில் கூறாமல் விடுவது பொருத்தமற்றதாகிவிடும்.

பாதுகாப்புப் படைகளின் பலத்தைப் பெருக்கியதால்தான் இன்று தீவிரவாதிகள் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண முன் வந்துள்ளார்கள் என்று அமைச்சர் அத்துலத் முதலி துணிந்து சொல்லிவிட்டார்.

அவரைத் தவிர வேறு எவருக்கும் இந்த அசகாயத் துணிச்சல் வராது.

நல்ல வேளை 'கொழும்பு அரசு தனது படைப் பலத்தை அதிகரித்ததனால்...' என்று அமைச்சர் சொல்லி விட்டார்.

இல்லாவிடில் உண்மை இப்போது ஊமையாக இருக்காமல் வெளிப்பட்டு இருக்குமே.

அமைச்சர் அத்துலத் முதலி படைப்பலத்தைப் பெருக்க, அவரின் தலைவரோ சரித்திரத்தின் பழைய குப்பையைக் கிளறியிருக்கின்றார்.

இவர் நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிக்க, தர்மிஷ்டரோ 1920 இல் இருந்த பைல்களைத் தூசு தட்டினார்.

பாதுகாப்புச் செலவினம் 2 ஆயிரம் கோடியாக உயர,

தர்மிஷ்டரோ 1957 இல் கிரிபத்துடன் தயாரிக்கப்பட்ட உடன்பாட்டை கையில் எடுத்துக் கொண்டார்.

இப்போது கூறுகிறார்: பாதுகாப்புப் படைப் பலம் அதிகரிக்கப்பட்டதனால் தான் பேச்சுக்களுக்குத் தீவிரவாதிகள் முன்வந்தார்கள் —என்று.

அமைச்சரின் கருத்தைப் பார்த்தால் பேச்சுக்கு தீவிரவாதிகள் முன்வராததுதான் 'முட்டுக்கட்டை'யாக இருந்ததுஎன்ற மாதிரி அமைந்துள்ளது.

உண்மையில் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்தது எது?

அர்த்தமுள்ள யோசனை ஒன்றை மாற்றுத் தீர்வாக கொழும்பு அரசு சமர்ப்பிக்காததுதான்.

வடக்கு-கிழக்கு இணைப்பை தர்மிஷ்டர் ஏற்றுக் கொண்ட பின்னர் தானே முட்டுக்கட்டை நீங்கியது.

அமரர் பண்டாரநாயக்காவும் ஓர் ஒக்ஸ்போர்ட் பட்டதாரி. அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் ஓர் ஒக்ஸ்போர்ட் பட்டதாரி தான்.

என்னே இடைவெளி!

★

# ஆயுதக் குறைப்புக்கு

## ரஷ்யா புதிய யோசனை

மாஸ்கோ, ஜூலை 25

சர்வதேச ரீதியில் ஆயுதக் குறைப்பு சம்பந்தமான உடன்பாடு ஒன்றைக் காணும் புதிய யோசனை ஒன்றை சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் வெளியிட்டிருக்கின்றார்.

நடுத்தர, குறைந்த தூர ஏவுகணைகளை அகற்றுவது சம்பந்தமாக முன்னர் விதித்துள்ள நிபந்தனை ஒன்றையும் விலக்கிக் கொள்ள சோவியத் யூனியன் முன்வந்துள்ளது.

பிலிப்பீன்ஸ், தென் கொரியா, இந்து சமுத்திரம் ஆகிய இடங்களில் இருந்து ஏவுகணைகளை விலக்கிக் கொள்ள அமெரிக்கா முதலில் முன்வர வேண்டும் - என்பதே அந்த நிபந்தனை ஆகும்.

ஆனால் அலாஸ்காவில் இருந்து 100 யுத்த தளபாடங்களை அமெரிக்கா அகற்ற வேண்டும் என்று சோவியத் தலைவர் வலியுறுத்தி இருக்கின்றார்.

சோவியத்தின் புதிய யோசனைகள் இன்னும் ஜெனீவாப் பேச்சுக்களில் முன் வைக்கப்படவில்லை.

புதியயோசனை குறித்து வெள்ளை மாளிகை கருத்து வெளியிட்டுள்ளது.

''வரவேற்கத்தக்க யோசனை இது. ஆனால் அதிபர் றேகன் இந்த யோசனையை ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் கூறிவிட்டாரே!''—

இப்படி வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

(இ-எ)

## கண்ட இடத்தில் சுடும்படி உத்தரவு

கராச்சி, ஜூலை 25

கராச்சி நகரில் ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களைக் கண்ட இடத்தில் சுடும்படி பாதுகாப்புப்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை பொலீஸாருக்கும் மக்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களில் பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக 7 பேர் உயிரிழந்தனர். அவர்களில் ஒருவன் பத்து வயதுச் சிறுவன்.

பொலீஸார் கராச்சி நகர் எங்கும் (புதன் கிழமை) சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். கராச்சி நகரில் இப்போது காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது.

(இ-எ)

## ஷெயில்சிங் டில்லியில் வசிப்பார்

புதுடில்லி, ஜூலை 26

ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய திரு. கியானி ஷெயில் சிங், புதுடில்லியிலேயே வசிப்பார்.

பெங்களூரில் வசிக்கும்படி விடுத்த அழைப்பை திரு. ஷெயில் சிங் ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

இந்த அழைப்பை விடுத்ததற்கு கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டேக்கு, ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

(இ-எ)



பத்திரிகையாளர்களுடன் பிரபா.

# அரசபயங்கரவாதத்தை எதிர்க்கும் பிடிவாதக்காரன்

தம்பிக்கு இரண்டு வாதம் உண்டு— இப்படி அக்கரையிலும் இக்கரையிலும் கூறுகின்றார்கள்.

இக்கரையில் இருந்து 30 ஆண்டுகளாக இணைப்பை எதிர்த்து வந்த தர்மிஷ்டர் கூறுகின்றார்: 'தம்பிக்குப் பயங்கரவாதம்'- என்று.

அக்கரையில் இருக்கும் மத்தியஸ்தர் கூறுகின்றார்: 'தம்பிக்குப்பிடிவாதம்' —என்று.

தம்பியோ கூறுகின்றார்: 'நான் அரச பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் பிடிவாதக்காரன்'—என்று.

தமிழ் மக்கள் நிம்மதியான, உறுதியான வாழ்வு காண ஆசைப்படும் பிடிவாதக்காரன் நான்—

இப்படி உள்ளத்தைத் திறந்து பத்திரிகையாளரிடம் தெரிவித்தார், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன்.

எனது மக்களுக்காக, அவர்களின் விடிவுக்காகப் பிடிவாதமாக நடந்து கொள்கிறேன்'— இப்படிச் சொன்னார் தம்பி.

'எமது மக்கள் தமது தாயகத்தில் சுயமரியாதை, கௌரவம் ஆகியவற்றுடன் வாழ வேண்டும்' —

இப்படி அந்த இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பிடிவாதம் பிடிக்க வேண்டும்.

அதற்காகப் போராடும் இயக்கம் ஒன்றை நடத்தும் தலைவன் எப்படியான பிடிவாதக்காரனாக இருக்கவேண்டும்?

அதற்கு உதாரண புருஷராக விளங்குகின்றார் புலிகள் தலைவர்.

பிரதமர் ராஜீவ் இந்திய விமானப்படை ஹெலிக்கொப்டரை அனுப்பி அவரை அழைத்தது; அப்பிடிவாதம் தன்னலமற்றதாக இருந்ததால்தான்.

தர்மிஷ்டரின் பிடிவாதம் அப்படிப்பட்டதா?

இல்லை என்பது, இணைப்புக்கு ஒப்புக்கொண்டதில் இருந்து தெளிவாகத் தெரிகின்றது.

ஓர் இனம் தனது பரம்பரைப் பிரதேசத்தில் வாழ எனது உயிர் உள்ளவரை அனுமதியேன்.— இப்படி இன்னோர் இனத்தின் தலைவன் பிடிவாதம் பிடிக்கின்றார்.

இது தன்னலமற்ற பிடிவாதமா? இல்லை

அவரின் இனத்தின் நலனைப் பறிக்கும் கோரிக்கையையா மற்ற இனம் விடுத்து உள்ளது? அதுவும் இல்லை.

அப்படி என்றால் ஏன் இந்தப் பிடிவாதப் போக்கை அத்தலைவர் கடைப்பிடித்து வந்தார்.

தனது பேரினவாதப் போக்கை நிலைப்படுத்தவே அத்தலைவர் இப்பிடிவாதத்தைக் கடைப்பிடித்து வந்தார், நேற்று வரை.

சுய நலப் போக்குக்காக பிடிக்கும் பிடிவாதம் இறுதிவரை நிலைத்து நிற்காது.

50 வயதில் பிடித்த பிடிவாதம் 80 வயதில் உடைந்து விட்டதே!

''பிடிவாதம் வம்பு பண்ணக் கூடாது''— என்பதை இனியாவது தர்மிஷ்டர் உணர்ந்து கொள்வாரா? ★

**பொய்யாமொழி**



**குறள்:**

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

**பொருள்:**

... வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி ... இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

26 07-1987 ஞாயிற்றுக்கிழமை

மீண்டும் வழமையான இடத்தில்
★ ராஜ் கோபால்ஸ் ★
திருமண வைபவங்களுக்கேற்ற
பட்டுப்புடவைகளைப் பெற்றுக்கொள்ள
★ ராஜ் கோபால்ஸ் ★
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# தென்னிலங்கையில் தமிழர் பீதி
# வடக்கு நோக்கி வர ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை26 தமிழ் மக்கள் பலர் தெற்கில் இருந்து வடக்கை நோக்கி வர ஆரம்பித்துள்ளனர்.

நேற்று கொழும்பு மற்றும் பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாகவும், எதிர்க்கட்சியினர் மற்றும் பிக்குமார் ஆர்ப்பாட்ட, ஊர்வலம் நடத்த உத்தேசித்திருப்பதாலும் தமிழர்கள் பீதி அடைந்துள்ளனர்.

1983 ஜூலை கலவரம் போன்ற ஒரு நிலைமை ஏற்படலாம் என்ற அச்சமே அவர்கள் வடக்கு நோக்கி வரக் காரணம் ஆகும்.

தனியார் பஸ்களை வாடகைக்கு அர்த்திக் கூட நேற்றுப்பலர் இங்கு வந்து சேர்ந்தனர். (இ-10)

## எவ்வளவு......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விக்கு வரும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படும்.

**ஈழத்துக்கு இடமில்லை**

மாகாணசபைத் தேர்தல் இந்த ஆண்டு முடிவுக்குள் நடத்தப்படும்.

இத் தேர்தலில் ஐ.தே.க. போட்டியிடும்.

மாகாணத்தின் ஆளுநரை, ஜனாதிபதியே நியமிப்பார்.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின்படி கொழும்பிலுள்ள இஸ்ரவேலிய நலன்புரி பிரிவு உடனடியாக மூடப்படும். இலங்கை இராணுவத்தினர் இனிமேல் பயிற்சிக்காக பாகிஸ்தானுக்கு அனுப்பப்படமாட்டார்கள்.

ஈழம் என்ற பேச்சுக்கே இனி இடமிருக்காது.

புதிய தீர்வு இந்த நாட்டின் ஒற்றை ஆட்சி, சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. —இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்தார். (அ-எ)

உறுதி மொழியிலிருந்து

# இலங்கை அரசு பின்வாங்காது

## அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை

சென்னை, ஜூலை 29 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு வே. பிரபாகரனுக்குக் கொடுத்த எந்த ஒரு உறுதி மொழியிலும் இருந்து இலங்கை அரசு பின்வாங்காது என்று நம்புகிறேன்.

புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார்.

தமிழர்கள் போதியளவு கஷ்டப்பட்டு விட்டார்கள். அடிப்படைக் கோரிக்கையை விட்டுக் கொடுக்காமல் தீர்வு ஒன்றைக் காணவே அவர்கள் விரும்புகின்றார்கள்.

வடக்கு கிழக்குக்கு தன்னாட்சி வழங்கும் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இருப்பதால் இந்த ஒப்பந்தம் குறிப்பிடத்தக்க ஒன்று என்று புலிகள் இயக்கம் கருதுகின்றது—

இப்படி திரு அன்ரன் பாலசிங்கம் மேலும்தெரிவித்தார். (இ-எ)



கல்வியங்காட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் சதாசிவம்கணேசன் அலஸ் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க அழைத்து செல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

19 ஆம் வார்ட் தாக்குதலில் காயமடைந்த இவர், தற்பொழுது இடது கால், இடது கை இயக்கமின்றி ஆஸ்பத்திரியில் இருக்கின்றார். (படம்: சண். ஜோண்சன்)

# சுய கௌரவம் இழந்து அரசியல் தீர்வு காண்பதா?

## காமினி ஜெயசூரியா கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 26 சுய கௌரவத்தை இழந்து அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதா?

இப்படி விவசாய அமைச்சர் காமினி ஜெயசூரியா கேட்டார்.

கடந்த வியாழன் நடந்த அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ஜெயசூரியா முன் கண்ட கேள்வியை எழுப்பினார்.

இனப் பிரச்சினையின் புதிய யோசனைகளை விளக்க ஜனாதிபதி இக் கூட்டத்தை அழைத்து இருந்தார்.

அமைச்சர் காமினி ஜெயசூரியா மேலும் சொன்னதாவது;

புதிய யோசனைகளை நான் எதிர்க்கின்றேன். தமிழருக்கு என்று ஒரு தனி மாநில அமைப்பு வழங்குவது அரசின் முன்னைய நிலைப்பாட்டுக்கு முரணானது,

பிரதமர் பிரேமதாசா நாடு திரும்பியபின்னரே புதிய யோசனை பற்றி இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

இப்படி அமைச்சர் ஜெயசூரியா சொன்னார்.

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து பேசுகையில், "நாட்டில் சமாதானம் திரும்பினாலும் பாதுகாப்புச் செலவினத்தை இதே நிலையில் தான் வைத்திருக்க வேண்டும்" என்றார்.

நிதி அமைச்சர் ரொனி டி மெல் பேசுகையில் யுத்தம் தொடர்ந்தால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலையும். அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தி வைக்க வேண்டி வரும்,

"மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

"புதிய யோசனைகளை ஏற்றுக் கொள்வதைத் தவிர மாற்றுத் தீர்வு எதுவும் எம்மிடையே இல்லை" என்றார்.

அமைச்சர் காமினி திஸநாயக்காவும் இதை ஆதரித்தார். (இ-எ)

## பிரபாகரன் மீண்டும் வலியுறுத்து

புதுடில்லி, ஜூலை 26 சுதந்திரத் தமிழீழம் அமைப்பதன் மூலமே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படமுடியும்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள்தலைவர் திரு பிரபாகரன் புதுடில்லியில் பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார். (இ-எ)

## 95 சத வித எம்.பிக்கள் ஆதரவு

கொழும்பு, ஜூலை 26 அரச நாடாளுமன்றக் குழுவில் புதிய யோசனைக்கு குறிப்பிடத்தக்க அளவு ஆதரவு இருந்தது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இப்படிச் சொன்னார் என்று 'டெய்லி நியூஸ்' செய்தி வெளியிட்டது.

95 விதமான எம். பிக்கள் புதிய யோசனையை ஆதரித்தனர்–

எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

ஒப்பந்தத்தில்

# மலையகத் தமிழர் பற்றி குறிப்பிடப்படாவிடில் போராட்டம் --- ஈரோஸ்

சென்னை, ஜூலை 26 இலங்கை—இந்திய உடன்பாட்டில் பத்து லட்சம் மலையகத் தமிழர் பற்றிக் குறிப்பிடப்பட வேண்டும்.

இல்லாவிடில் எமது போராட்டம் தொடரும் —

ஈரோஸ் வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன என்று வெரித்தாஸ் வானொலி நேற்று இரவு அறிவித்தது.

உடன்பாடு கையெழுத்திட்டபின்னர் அமைதி ஏற்பட்டுவிடாது.

உடன்பாட்டில் காணப்படும் அம்சங்களை அமுல் நடத்தப்படுவதைப் பொறுத்துத்தான் அமைதி தோன்றமுடியும்.

இப்படி ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி மேலும் அறிவித்தது. (இ-எ)

## இரண்டொரு தினங்களில் முடிவு

புதுடில்லி, ஜூலை 26 கொழும்புக்கு எப்போது விஜயம் செய்வது என்பதுபற்றி இரண்டொரு தினங்களில் முடிவு செய்யப்படும்.

-இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார் என்று பி பி. சி. கடந்த இரவு அறிவித்தது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு முயற்சிகள் பலனளிக்க சில வாரங்களுக்கு மேல் எடுக்கும் என்றும் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார். (உ-எ)

# திருமலை--

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

எல்லாம் அன்றும் கூறின; இன்றும் கூறுகின்றன.

இதனிடையில் கொழும்பு அரசின் இராணுவ நடவடிக்கையினால் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்கள் அகதிகளாயினர்.

—பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். பெண்கள், குழந்தைகள் அப்பாவிகள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர்.

—விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் பலர் கொல்லப்பட்டனர்.

—பல அப்பாவித் தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை.

—ஆயிரக்கணக்கானோர் அரசு தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு நினைக்க முடியாத அளவு சித்திரவதை செய்யப்பட்டனர்; செய்யப்படுகின்றனர்.

—பொம்மர் விமானங்களின் குண்டு வீச்சுத் தாக்குதல், நேபாம் குண்டுத் தாக்குதல்—இவற்றில் இறந்தோர், அங்கவீனம் அடைந்தோர் ஏராளம், ஏராளம்.

—வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகமே சுடுகாடாகியது.

—அரசு தரப்பிலும் படையினர் பலர் உயிரிழந்தனர்.

இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னர், தன்னால் கிழித்தெறிய வைக்கப்பட்ட '1957 வ-கி இணைப்பு' யோசனையை தர்மிஷ்டர் முன்வைத்திருக்கின்றார்.

இப்போது வடக்கு-கிழக்கை அனுமதிப்பது என்றால், அதை ஏற்கனவே செய்து இவ்வளவு அழிவையும் தடுத்திருக்கலாமே!

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா கேட்கின்றார்.

இவ்வளவு அழிவுகள் தமிழருக்கு ஏற்பட்ட பின்னரும் 1957 யோசனைக்குத் தான் நாம் செல்ல வேண்டுமா?

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கேட்டிருக்கின்றார். 'இணைப்பு' என்ற 'அரசியல் சுருக்கில்' இருந்து தப்புவாரா, இல்லையா என்பதை இனி வரும் சம்பவங்கள் தான் தெரியப்படுத்தும். ★

# வடக்கு- கிழக்கிலிருந்து ராணுவத்தை முற்றாக விலக்க அரசு தயார்

கொழும்பு, ஜூலை 29 தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பூரணமாக இராணுவத்தை விலக்கிக்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்திருக்கிறார்.

புதிய சூழ்நிலை தோன்றியிருக்கின்றது. இதனால் வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்துள்ளேன்.

சமாதானத் தீர்வு ஏற்பட்ட பின்னர் புனர்வாழ்வு அமைச்சராக பணியாற்றவே விரும்புவதாக ஜனாதிபதியிடம் கூறியிருக்கின்றேன்—

இப்படி அமைச்சர் கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ எ)

அகதிகளை மீளக் குடியேற்றும் பணியில்

# இலங்கை --- இந்தியா இணைந்து செயற்படும்

கொழும்பு, ஜூலை 26 கிழக்கு மாகாணத்தில் இருந்து அகதிகளாக வெளியேறிய தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களைச் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்துவதில் இலங்கையும் இந்தியாவும் இணைந்து செயல்படும்.

ஸ்ரீ கோத்தாவில் நடந்த ஐ.தே.க. நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையில் தலையிட்டு பயங்கரவாதத்தை வளர்த்து பாதுகாப்பைப் பலவீனப்படுத்தும் என்றும் அமைச்சர் திஸநாயக்கா சொன்னார்.

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னதாவது:

சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரசைகள் இந்தியா திரும்புவதற்குப் புதிய உடன்படிக்கை வசதி செய்யும்.

தென் இந்தியாவில் உள்ள தீவிரவாத முகாம்கள் மூடப்படும் நிலையையும் இந்த உடன்பாடு ஏற்படுத்தியுள்ளது

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சிம்லா உடன்பாடு இரு நாடுகளுக்கு இடையேயானது. சரியாக அமுல் நடத்தப்படுகின்றது.

பஞ்சாப் உடன்படிக்கை ஒரு கட்சியுடன் செய்யப்பட்ட ஒன்று. அது அமுல் நடத்தப்படவில்லை.

— இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

"இனப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் இனி மேலும் உதவப்போவதில்லை என்று இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு கூறிவிட்டது"— என்று நிதி அமைச்சர் ரொனி டி மெல் கூறினார். (இ-எ)

## நாம் --- ---

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

களிடம் "பொறுத்திருங்கள். வெகுவிரைவில் சுதந்திரம் கிடைக்கப்போகிறது" என்று கூறி வந்தோம்.

'அது நடக்கப் போகிறது. அது நாளையோ, நாளை மறுதினமோ என்றுசொல்லமுடியாது. ஆனால் வெகு விரைவில் நடந்தே தீரும்' என்று அவர் உறுதியுடன் கூறினார்.

திரு. வேணுகோபால் இந்தியா சென்றிருந்த சமயம் தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்களைச் சந்தித்ததாகவும் கூறினார். (அ-7)

## திடீர் --- ---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தார்.

அவர்சொன்னதாவது;

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு வழி வகுத்த பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்த திரு. ஜெயவர்த்தன எப்படி அதை இன்று ஒப்புக் கொள்ள முடிந்தது?

வடக்கு, கிழக்கில் உள்ள 26 இராணுவ முகாம்களையும் அரசு விலக்கிக் கொள்ளப் போகின்றதா?

இன்றைய துக்ககரமான நிலை, அரசு இந்த யுத்தத்தில் தோற்றுவிட்டது என்பதே.

இப்படி அனுரா பண்டாரநாயக்கா கூறினார்.

## ராஜீவ்- -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கிறார்.

பல ஆண்டுகளாக தமிழக மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு காட்டி வந்தனர். எம் மீது வைத்து இருந்த நம்பிக்கைக்கும் ஆதரவுக்கும் நான் தமிழக மக்களுக்கு நன்றி கூறுகின்றேன்— என்றும் பிரபாகரன் மேலும் சொன்னார்.

வடமராட்சியில் ஜீ. சி. ஈ. பரீட்சை:

# மாணவர்களுடன் பெற்றோரும் வந்தனர்

வடமராட்சி, ஜூலை 26 வடமராட்சியில் நேற்று ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை அமைதியான முறையில் ஆரம்பமானது. அங்குள்ள 9 பரீட்சை நிலையங்களிலும் பரீட்சார்த்திகள். எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

பரீட்சார்த்திகள் பலர் வடமராட்சிக்கு வெளியில் இருந்தே வந்து பரீட்சைக்குத் தோற்றினர்

அனேகமான பரீட்சார்த்திகளை பெற்றோர்களே தம்முடன் அழைத்து வந்தனர்.

கொடிகாமத்தில் இருந்து மட்டும் நேற்று சுமார் 10 பஸ்கள் வரை வடமராட்சி சென்று திரும்பின.

நெல்லியடியில் நேற்று சில கடைகள் திறந்திருந்தன. எனினும் சன நடமாட்டம் குறைவாகவே இருந்தது.

இராணுவத்தினரின் நடமாட்டமும் குறைவாகவே இருந்தது (இ-160)

ஒப்பந்தம் கைச்சாத்தாகி

# 96 மணித்தியாலத்தில் சமாதானம் ஏற்படுமாம்

கொழும்பு, ஜூலை 26 இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 96 மணித்தியாலத்தில் சமாதானம் ஏற்படும்–

இப்படி கொழும்பு அரசுப்பத்திரிகை டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட முதல் 24 மணித்தியாலத்தில் வன்செயல்கள் நிறுத்தப்படும்.

அதைத் தொடர்ந்து வரும் 72 மணித்தியாலங்களில் தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைப்பர் இதற்குப் பதிலாக அரசுத் துருப்புக்கள் முகாம்களுக்குள் வைக்கப்படும்.

தீவிரவாதிகள் ஆயுதங்களை அரச அதிபர்கள் அல்லது மாவட்ட அமைச்சர்களிடம் ஒப்படைப்பர்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார் என்று 'டெய்லி நியூஸ்' செய்தி வெளியிட்டது. (இ-எ)

## யாகப்பர் ஆலய திருநாள்

குருநகர், ஜூலை 26 குருநகர் புனித யாகப்பர் ஆலய திருநாள் யாழ் ஆயர், வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து சிறப்பிக்க நேற்று நடைபெற்றது.

## ★ இருவரும் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை26 தனிநபர் ஆணைக்குழுவின் ஆணையாளர் அலஸும் சுவீடிஷ் தூதுவர் ஹென்றி குயினலும் நேற்றுக்காலைபலாலியில் இருந்து கொழும்பு பயணமாகினர். இருவரும் ஒரே விமானத்திலேயே பயணம் செய்தனர்.

## பேச்சு

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் இந்திய அரசு அதிகாரிகள் நேற்றும் பேச்சு நடத்தினர்.

பிரதமரை சந்தித்தது பற்றி எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

எப்போது, எங்கே பிரதமர் காந்தி - பிரபாகரன் சந்திப்பு நடைபெறும் என்பதை வெளியிட வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் மறுத்து விட்டனர். (உ-எ)

## இரக்கமான வேண்டுகோள்



சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட எனது கணவர் அ. விஜயகுமார் (15 7.87) அன்று பூநகரி செம்மண் குன்றிலிருந்து புறப்பட்டவர் வீடு வந்து சேரவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து உடன் அறியத்தாருங்கள்.

சாந்தினி
விஜயகுமார்
126, K. K. S. ரோட்.
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 26-07-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 393/3 Navalar Road Jaffna on Sunday July 26, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org